## ஜூன் மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேத பாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.06.2017 | காலை 5.30மணி | **வாக்குத்தத்த ஆராதனை** | யோவான் 14:1-8 | அருள்திரு J.கிதியோன் தைரியம் |
| 04.06.2017 | காலை 8.30மணி | **தூய ஆவி திருநாள் (திருவிருந்து)** | எசேக்கியல் 36:24-36<br>யோவான் 20:19-23 | அருள்திரு J.கிதியோன் தைரியம் |
| 11.06.2017 | காலை 8.30மணி | **திரித்துவ ஞாயிறு**<br>மூவொரு கடவுளில் பற்றுறுதி | எஸ்ரா 1:4-28<br>மத்தேயு 28:16-20 | அருள்திரு J.கிதியோன் தைரியம் |
| 18.06.2017 | காலை 8.30மணி | மாணவர் ஞாயிறு<br>கடவுளின் அருட்கொடை<br>அறிவு ஞானம் | நீதி மொழிகள் 2:1-12<br>லூக்கா 2:41-52 | அருள்திரு J.கிதியோன் தைரியம் |
| 25.06.2017 | காலை 8.30மணி | வாலிபர் ஞாயிறு<br>தற்கால உலகில்<br>வாலிபர்களின் ஆன்மீகம் | ஆதியாகமம் 41:37-43<br>மத்தேயு 19:16-22 | அருள்திரு J.கிதியோன் தைரியம் |

## ஜூன் மாதம் - 2017

# ஆயர்மடல்

இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள் முதலாவதாக நான் மீண்டும் C.S.I. கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு திருச்சபையில் திருப்பணிப் புரிய கடவுள் அளித்த நல்வாய்ப்பிற்காக நன்றி செலுத்துகிறேன்.

இந்த ஆயர் மடல் மூலம் உங்களை சந்தப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். கடவுள் உங்கள் அனைவரையும் நித்தம் வழி நடத்தி இந்த மாதத்தை சமாதானத்துடனும், சந்தோஷத்துடனும், வெற்றியுடனும் கடந்துவர அருள்புரிவாராக.

கடவுள், நம் திருக்குமாரனாம் இயேசு கிறிஸ்துவின் வழியாய் வாக்களித்த தூய ஆவியாரை நம் இருதயங்களில் தங்கி நம்மை வழிநடத்திட அருளியிருக்கிறார். தூய ஆவியார் அருளப்பட்ட நோக்கத்தை நாம் மூன்று தலைப்பின் கீழ் புரிந்துக் கொள்வோம்.

1. **அறிவூட்டும் ஆவியார் :**

தூய ஆவியார் நமக்குள் வாசமாய் இருந்து, இயேசு நமக்கு எடுத்துச் சொன்ன உண்மைகளை நமக்கு விளக்கிக் காட்டுகிறார். (யோவான் : 16: 13-14) மேலும் நாம் ஏன் ? இயேசுவினால் ( I கொரிந்தியர் : 2.9.12) மீட்கப்பட்டிருக்கிறோம் என்பதையும், நாம் எதற்காக, எப்படிப்பட்டவர்களாக வாழவேண்டும் என்பதையும் எடுத்துரைத்து அறிவூட்டுகிறார். (ரோமர்: 8:9,10,11,12) நாம் இறையரசிற்கு உரியவர்கள் என்றும் அதற்காகவே தெரிவு (கலாத்தியர் : 4-6) செய்யப்பட்டர்கள் என்றும், நாம் இயேசுவோடு எல்லா நிலையிலும் (ரோமர் : 8:14) இணைந்து இருக்க வேண்டும் (யோவான் : 16:8-9) என்பதையும் நினைப்பூட்டி அறிவூட்டுகிறார். இந்த அறிவு தான் தூய ஆவியார் நமக்கு தரும் முதல்பெலன், இந்த பெலன் இல்லாமல் நாம் கடவுளுக்குரியவர்கள் என்று சாட்சி பகர முடியாது (அப்போஸ்தல் : 1:8)

2. **ஆற்றல் படுத்துல் ஆவியார்**

அறிவூட்டும் ஆவியார், நாம் பெற்றுக்கொண்ட அறிவுக்கும் ஏற்புடையவர்களாக பெலன் தருகின்றார். எனவே, அந்த ஆற்றல் நாம் பிசாசின் தந்திரங்களுக்கு எதிர்த்து நிற்கும் ஆற்றல் (அப்போஸ்தலர் :-4:19-20 ) நமக்கு இயேசு வந்ததின் நோக்கம் தெளிவாக இருந்தால் நாம் இறையரசுக்காக வாழும் மக்கள், இந்த உலகத்திற்கு ஏற்புடையவர்களாக வாழும் மக்கள் அல்ல. (எபேசியர் 6:10-12) (யாக்கோபு 4:4-7)

எனவே நமக்கு இருக்கும் ஆவியார் நமக்கு பிசாசை எதிர்த்து நிற்கும் ஆற்றல் தந்து பெலப்படுத்துகிறார்.

3. **அர்ப்பணிக்கும் ஆவியார் :**

நாம் பெற்றுக்கொண்ட பெலனுக்கு ஏற்ப கடவுளுக்கு, இயேசுவுக்கு சாட்சிகாளக வாழ நம்மை தூய ஆவியார் வழிநடத்துகிற எபேசியர் : 4:28-32 ) (பிலிப்பியர் : 1:27) (I தெசலோனிக்கேயர் :4:3-8) நாம் இயேசுவுக்காக வாழும் வாழ்வு என்றால் நாதம் இறையரசிற்காக வாழும் வாழ்வு ஆகும். அதனை வலிமையுடன் நாம் வாழ முற்ப்பட வேண்டும்(ரோமர்:12:1-2) (எபேசியர்:2:10) எனவே (எபேசியர்:4:30) மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாக பெற்ற தூய ஆவியாரை துக்கப்படுத்தாமலும், வெட்கப்படுத்தாமலும் அவரிடன் வாழ்வை அர்ப்பணித்து, கீழ்ப்படிந்து, நற்சாட்சி புரிவோம். திரியேக கடவுள் நம் அனைவரையும் ஆசீர்வதித்து காப்பாராக.

இப்படிக்கு,

**உங்கள் ஆயர்**

## கீதங்களை புரிந்து பாடலாமா?

<u>கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு</u>

## வந்தனம் வந்தனமே

**சங்கராபரணம்** **சாபுதாளம்**

### பல்லவி

வந்தனம், வந்தனமே தேவ துந்துமி கொண்டிதமே – இது
வரையில் எமையே வளமாய்க் காத்த எம்துரையே, மிகத்தந்தனம்

### சரணங்கள்

1. சந்தஞ்சந்ததமே, எங்கள் தகுநன்றிக் கடையாளமே, – நாங்கள்
தாழ்ந்து வீழ்ந்து சரணஞ் செய்கையில் தயைகூர், சுரர்பதியே. – ஆமென்

2. சருவ வியாபகமும் எமைச் சார்ந்து தற்காத்ததுவே, எங்கள்
சாமி பணிவாய் நேமி துதிபுகழ் தந்தனமே நிதமே ! – ஆமென்

3. சருவ வல்லபமதும் எமைத் தாங்கினதும் பெரிதே – சத்ய
சருவேகரனே, கிருபாகரனே, உன் சருவத்துக்குந் துதியே. – ஆமென்

4. உன்தன் சர்வ ஞானமும் எங்களுள்ளித்திரியும் யாவையும் – பார்த்தால்
ஒப்பே தருங் காவலே உன்னருளுக்கோ தரும் புகழ் துதி துதியே.

5. மாறாப் பூரணனே, எல்லா வருடங்களிலும் எத்தனை – உன்றன்
வாக்குத் தவறாதருளிப் பொழிந்திட்ட வல்லாவிக்குந்த துதியே – ஆமென்

ஆசிரியர்: அருள்திரு. **மாசிலாமணி** (1858 - 1932)

ஆசிரியர் குறிப்பு: கீர்த்தனை 6-ல் காண்க.

பாடல் குறிப்பு : இப்பாடல் புதுவருட துதிப்பாடல் ஆகும்.

**பல்லவி :** இந்நாள் வரை என்னை நலமுடனும் வளமுடனும் காப்பாற்றிய எம் தேவனாகிய உமக்கு இதயே மகிழ்ச்சியான (துந்துமி) பேரொலியுடன், துதி (மிக தந்தனம்) – மிக அதிகமான வந்தனம்.



இல்லை, அவனுடைய வியாதி நிலையை அவனுக்கு சுட்டிக்காட்டி அவனுடைய ஒப்புதலோடு அதற்குரிய சிகிட்சைகளைச் செய்து அவனை குணமாக்குவதற்காகவே மருத்துவர் அவ்விதம் செய்கின்றார்.

உலகத்தில் பிறந்த மனிதர்கள் யாவரும் தேவனுடையப் பார்வையில் பாவிகள் என்று கிறிஸ்தவம் சொல்லுகிறது. எதற்காக? மனிதனை மட்டந்தட்டிப் பேசவா? மனிதனை மோசமாக சித்தரிக்கவா? மனிதனை இழிவுபடுத்தவா? இல்லை. அது மனிதனை மேல் தேவன் வைத்துள் அன்பையும், பரிவையும், கரிசனையையும், உயர்ந்த எதிர்பார்ப்பையும் வெளிப்படுத்துகிறது. தெய்வீக அழகுடன் வாழ்வதற்காக படைக்கப்பட்ட மனிதனே! நீ பாவத்தின் வலிமையால் மேற்கொள்ளப்பட்டு அழகற்று போய்விட்டாய். உயர்ந்த பண்புகளின்றியும், உன்னத குணங்களி யும், தேவ உறவின்றியும், நீ அழகற்ற ஒரு நிலைமையிலுள்ளாய். நீ உன்னை உணர்ந்து கொண்டு என்னிடம் வா. நான் உன்னை மீண்டும் தெய்வீக அழகுடைய உயர் நிலைமைக்கு கொண்டு வருகின்றேன் என்ற தெய்வத்தின் அன்பின் அழைப்பே அதின் பின்னாலுள்ளது.

கல்வியும், ஞானமும், ஆன்மீக ஈடுபாடும், உயர் நெறிவிருப்பமும் மனிதனிடம் சில நல்ல விளைவுகளை ஏற்படுத்த இயலும், சுய முயற்சியும், பக்தி நாட்டமும் அவனிடம் சில நல்ல குணங்களையும், நல்ல ஒழுங்குகளையும் ஏற்படுத்தக்கூடும், ஆயினும் மனிதன் தன்னுடைய சொந்த முயற்சிகளாலோ, பக்தி சம்பந்தமான பலவித நடவடிக்கைகளாலோ “பாவி” என்ற தன்னுடைய இயற்கை நிலையை மேற்கொண்டுவிடவோ, மாற்றிவிடவோ முடியாது. மதப் போதனைகளும், பக்தி ஆச்சாரங்களும், பூஜைகளும், யாகங்களும், புனிதத்தல விஜயங்களும், ஆன்மீகத் தலங்களின் தரிசனங்களும், தர்மச் செயல்களும், யோகிகளின் உபன்யாசங்களும், பலவிதத் தொழுகை முறைகளும் மனிதனை தேவன் விரும்புகின்ற உயர்தரத்திற்கு கொண்டு வந்து விடாது. இவற்றால் மனிதன் நற்குணங்களின்படி வாழ இயன்றவனாகவும், தீயக் குணங்களை முற்றிலும் தவிர்த்தவனாகவும், இறை உறவை அனுபவிக்கின்றவனாகவும் மாறிவிட இயலாது.

ஆசிரியர்

**தொடரும்....**

எனவே படித்தவனாயினும், பட்டங்கள் பல பெற்றவனாயினும், அறிவாளியாயினும், ஞானம் நிறைந்தவனாயினும், மத நெறிகளை போதிக்கும் போதகனாயினும், வாழ்வியல் போதனைகளை சிறப்பாப் பேச இயன்றத் தத்துவ ஞானியாயினும், அதிகாரியாயினும், நாட்டை ஆளும் தலைவனாயினும் அவன் தேவனுக்கு முன்பாக பாவியே,

மனிதன் அன்பு, தாழ்மை, உண்மை, நேர்மை, மனத்தூய்மை, பிறர்நலன் நாடுதல், பொறுமை தியாகம் ஆகிய உயர்பண்புகளோடு தேவ உறவை மனக்குள் அடையாளங்கண்டு கொண்டு வாழவேண்டியவன். அப்பொழுதுதான் அவன் மனிதன். ஆனால் சராசரி மனிதனிடம் நாம் என்ன காண்கின்றோம்? அவன் எவ்வளவு கற்றாலும், வனிடம் உயர்ந்த குணங்களைக் காண்பது அரிதாயிருக்கிறது. சிலரிடம் சில நல்ல குணங்களும், சில நற்செயல்களும் இருக்கும். ஆயினும் தகாத குணங்களும் தகாத செயல்களும் இணைந்தே இருக்கும்.

மனிதன் உயர்குணங்களோடும், உயர்ந்த சுபாவங்களோடும் உயர்ந்த செயல்யளோடும் இறை உறவுடனும் வாழ இயலாதபடி அவனை பாவம் என்றதொரு தீயவல்லமை தடை செய்கிறது. அந்த பாவத்தின் வலிமை அவனுடைய மனவலிமையை விடவும், உயர் நெறிகளை கற்றுணர்ந்த அனுபவத்தின் வலிமையை விடவும் அதிகமாக இருக்கிறது. எனவேதான் “பாவம் செய்கிறவன் எவனும் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறான்” என்று இயேசு சொடனனாடர. ( யோவான் 8:34) அதாவது தேவன் எதிர்பார்க்கும் உயர்ந்த தெய்வீக தரத்தில் வாழ இயலாமலும், தரந்தாழ்ந்ததாக தேவன் எண்ணுகின்ற வியங்களை தவிர்க்க இயலாமலும் பாவம் என்றதொரு தீயவல்லமை மனிதனை அடிமைகொண்டு ஆளுகைடச செய்கிறது. இப்படிப்பட்டதொரு அடிமை நிலையில் மனிதன் வாழ்வதால் மனிதனை கிறிஸ்தவம் பாவி என்று சொல்லுகிறது.

**2. பாவத்தை ஜெயிக்க இயலாத மனிதன்**

ஒரு மனிதனை பரிசோதனை செய்த மருத்துவர் மருத்துவ விதிகளின் அடிப்படையில் அவனை வியாதியால் பாதிக்கப்பட்ட நோயாளியாகக் கண்டறிகிறார். அவனை நோயாளியாகக் கண்டறிந்து கூறுவது எதற்காக? அவனை வேதனைப்படுத்தவா? இல்லை, அவனுடைய அற்பநிலையைச் கட்டிக்காட்டி அவனை இழிவுபடுத்தவா?



**சரணம் 1:** (சந்ததம் சந்ததமே) எப்பொழுதும் என்றென்றும் நாங்கள் நன்றி சொல்ல வேண்டியது உம்மையன்றி வேறில்லை. இதற்காக நாங்கள் தாழ்மையுடன் கீழே வீழ்ந்து சரணம் செய்கையில் (சுரர்) வானோர் தேவ தூதர்களின் (பதியே) தலைவரே (தயைகூர்) தயவாய் அருள்கூறும்.

**சரணம் 2:** (சருவ) சர்வ – எல்லாம் (வியாபகமும்) எங்கும் அறியப்படும். கடவுள் எங்களைத் தற்காத்ததற்காகக் கடலளவு புகழும் பணிவாய் துதிக்கிறோம் (நிதமே) எந்நாளுமே.

**சரணம் 3:** (சருவ) எல்லா (வல்லபம்) வலிமை திறமையிலும் எம்மைத் தாங்கி ஆதரித்தது மிகவும் பெரிய கிருபையே. (சத்ய) உண்மையான (சர்வ ஈஸ்வரன்) எல்லா உயிர்களுக்கும் நாதன் – (மேமே) கடவுளே, (கிருபை) அருளாளனே உமக்குத் துதி.

**சரணம் 4:** உம் எல்லா ஞானத்தையும் எங்கள் (இந்திரியங்களும்) புலன்களால் நாங்களறியும் அறிவையும் சிறந்த (காவலே) உம்பாதுகாப்பிற்கும் மற்றும் பல உம்மருட் செயல்களுக்கும் ஒப்பிட முடியாதே உம் புகழைப்பாடி ஓதவும் முடியாது.

**சரணம் 5 :** மாறாதவரே, (பூரணமே) முழுமையானவரே உம் வாக்குறுதிப்படி எல்லா வருடங்களிலும் (எத்தனை) எண்ண முடியாத அருள் (பொழிந்து) தேவைக்குமேல் தந்திட்ட (வல்லாவி) வலிமையும், திறனுமுடைய தூயாவியையும் துதிக்கிறோம்.

## <u>மருத்துவக்குறிப்பு</u>

**அக்ரூட் ( வால்நட் )**



- மூளை வளர்ச்சிக்கு சிறந்தது
- மார்பக புற்றுநோயை தடுக்க உதவும்
- எலும்புகளை வலுப்படுத்தும்.

# BIRTHDAYS IN THE MONTH OF JUNE

| | | | |
|---|---|---|---|
| June 1 | Mrs. Saroja Martin | June 18 | Mr. Sudhesh |
| June 1 | Mr. C. Rathnamani | June 18 | Mrs. Beautlin Vigil |
| June 2 | Mr. R. Joseph | June 19 | Mrs. Hepsiba Pari |
| June 2 | Mrs. J. Linda Joy Grace | June 20 | Mr. C.Rajesh |
| June 2 | Ms. Y. Jehoshemi | June 20 | Mr. Issac Benjamin |
| June 3 | Mrs. Sunitha Vayola | June 20 | Mr. S.Alwyn Raj |
| June 3 | Mrs. P. Joshua Sam Immanuel | June 21 | Master. Meshak Joyal |
| June 5 | Mrs. J. Vigila Gnana Rose | June 21 | Mrs. Abisha Annsmith |
| June 5 | Mr. A. Godwin | June 21 | Mr. Simon Jude Nimalan.E |
| June 6 | Mrs. G. Inbarani | June 21 | Mrs. Helen Sathya .J |
| June 7 | Miss. Samyutha | June 21 | Mrs. Annie Pushpam |
| June 7 | Mr. Vinod Gabriel | June 22 | Mrs. P.Eval Mona Metilda |
| June 8 | Miss. Benicia David | June 22 | Mr. I. Solomon Rufus |
| June 8 | Mrs. Percy Rajkumar | June 22 | Master. E.Allen Jones |
| June 8 | Mrs. M. Sujatha | June 22 | Mrs. Hannah Suresh Kumar |
| June 9 | Mr. M. Praveen Babu | June 25 | Mrs. Flora Nirmala |
| June 10 | Mrs. Jeba | June 26 | Mr. V.Robin Bennet Singh |
| June 10 | Mrs. R. Margaret | June 26 | J. Joy Rachel Shalom |
| June 11 | Mrs. S. Hannath Chella Preethi | June 26 | Mrs. S.Pritha Hema Mercy |
| June 11 | Mr. M. Raju | June 28 | Mrs. J.Esthar Jayamani |
| June 12 | Mr. P. Jonathan Joseph | June 29 | Master J.Johan Sam |
| June 12 | Mr. Manoj Kumar Joseph | June 29 | Mr.Issac Shaun Jeshurun |
| June 12 | Mrs. J. Baby Kamala | June 29 | Mrs. Mercy Alex |
| June 14 | Mrs. D. Selvimary | June 30 | Mrs. G.G. Roselind jebaselvi |
| June 14 | Mr. P.Sundaram | June 30 | Mr. P.Jerald Matthew |
| June 15 | Mr. P.Jawahar | June 30 | Mr. J.Justin Kumar |
| June 15 | Mr. P.Amurtharaj | June 30 | |
| June 16 | Mr. Yesu Dhas | June 31 | Mrs. Y.Sukhi |
| June 16 | Mr. J.Joseph Solomon | | |



# சிறப்பு கட்டுரை

## கிறிஸ்தவம் கூறும் சில உண்மைகள்

ஒரு மனிதன் இயற்கையாக “பாவி” என்ற நிலையில் இருப்பதாக கிறிஸ்தவம் சொல்லுகிறது. அதாவது அவன் பாவத்தன்மை உடையவனாகவும், பாவம் செய்யும் இயற்கையை உடையவனாகவும் இருக்கின்றான். ‘‘எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்” என்று வேதம் சொல்கிறது. (ரோமர் 3:23) பாவி அல்லது பாவம் செய்கிறவர்கள் என்றால் அவர்கள் மிகவும் மோசமானவர்களாகவும், விரும்பத்தகாதவர்களாகவும் இருப்பார்கள் என்று கூற இயலாது.

அவர்கள் மனிதர்களின் பார்வையில் நல்லவர்களாகவும் , நல்ல செயல்களை உடையவர்களாகவும், விரும்பப்படத்தக்கவர்களாகவும் இருக்க முடியும். ஆனால் அவர்கள் மகா பரிசுத்தமான தேவனுடைய பார்வையில் எப்படித் தோன்றுவார்கள் என்பதே முக்கியம். ஒருவர் நல்ல அழகானதொரு வீட்டை மிகுந்த பணச் செலவில் கட்டினார். பலர் அதைப் பார்த்து மிகவும் பிரமாதமாகவும், அழகாகவும் இருக்கிறது என்றனர். ஆயினும் அந்த வீட்டின் சொந்தக்காரர் அந்த வீட்டின் மேல் அதிருப்தியாயிருந்தார். அது தான் விரும்பின விதமாகவோ எதிர்பார்த்த விதமாகவோ இல்லை என்று வருந்தினார். பலருஜடய பார்வையில் நல்லதாகவும், அழகானதாகவும் அந்த வீடு தோன்றிய போதிலும் அந்த மனிதரின் திட்டத்தின்படியோ, கற்பனை செய்தபடியோ அது அமையவில்லை.

அது போலவே தேவனுடைய பார்வையில் மனிதனும். மனிதன் தெய்வீக அழகுடனும், தேவ உறவுடனும், தேவனுக்கேற்ற உயர்நிலையுடனும் வாழ்வதற்காக விசேமாக படைக்கப்பட்டவன். (ஆதி 1:27)

எனவே அந்த தெய்வீகத் தரத்துடன் காணப்படாத நிலையில் ஒரு மனிதன் பலருடைய பார்வையில் நல்லவனாயினும், தேவனுடையப் பார்வையில் பாவியே. தேவனுக்கேற்ற உயர்ந்த குணாதிசயங்களுடனும், தேவ ஐக்கியத்துடனும் வாழ இயலாத பாவ இயற்கை அல்லது பாவத்தன்மை அவனிடம் உள்ளது.

# வேத வினா - விடை போட்டி

## ஜுன் மாத கேள்விகள்

( வசன ஆதாரம் தரவும் )

இந்த வார்த்தைகளுக்கு பொருள் என்ன ?

1. ஜெகர் சக தூதா ?
2. லோகம் மீ ?
3. கபத்தா ?
4. எந்நக்கோரி ?
5. யூரோக்கலி தோன் ?
6. மக்னிதான் ?
7. பிகெமோத் ?
8. லிவியாதான் ?
9. மக்னாயீம் ?
10. மக்பேலா ?

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 26-06-2017**

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி


**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**

எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை – 600 099.


குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்


csinewlifeinjesus@gmail.com 9444 633129

**www.csinewlifeinjesus.org**




# சென்ற மாத போட்டியின் விடைகள்

| | | |
|---|---|---|
| 1. | போவாஸ் | – II நாளாகமம் 24 : 1 |
| 2. | ரெகொபெயாம் | – II நாளாகமம் 12 : 13 |
| 3. | அப்சலோம் | – II சாமுவேல் 3 : 3 |
| 4. | மனாசே | – II இராஜாக்கள் 21 : 1 |
| 5. | எசேக்சியா | – II நாளாகமம் 29 : 1 |
| 6. | யோசபாத் | – II நாளாகமம் 20 : 31 |
| 7. | யோயாக்கீம் | – II இராஜாக்கள் 23 : 36 |
| 8. | அகசியா | – II இராஜாக்கள் 8 : 26 |
| 9. | உசியா | – II நாளாகமம் 26 : 3 |
| 10. | சிதேக்சியா | – II இராஜாக்கள் 24 : 18 |

## சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. ஜுபிலி தர்மராஜ்
2. திருமதி. மெரில் ஜஸ்டின்
3. திருமதி. பொற்செல்வி
4. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
5. திருமதி. ரோஸ்லெட் செல்லன்
6. திருமதி. கலா சுந்தரகுமார்
7. திருமதி. ஜாய்ஸி விமலா
8. திருமதி. சீதா ஹென்றி
9. திருமதி. லீலா டிக்சன்
10. திருமதி. ஸ்லிட்டிலின் ரிச்சர்ட்
11. திருமதி. சைனி ரிச்சர்ட்

## படித்ததில் பிடித்தது

### காலச்சக்கரம்

ஓர் எட்டில் வளர்க்காத பிள்ளையும்
ஈரெட்டில் கற்காத கல்வியும்
மூவெட்டில் முடியாத திருமணம்
நாலெட்டில் பெறாத பிள்ளையும்,
ஐயெட்டில் சேர்க்காத செல்வமும்
ஆறெட்டில் தேடாத புகழும்
ஏழெட்டில் சுற்றாத தேசமும்
எட்டெட்டில் கிடைக்காத ஓய்வும்

## பெண்கள் பகுதி :

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மடல் மூலமாக மீண்டுமாக நம்முடைய ஐக்கியம் கிறிஸ்துவுக்குள் பெலப்படுத்துவதற்காக நன்றி செலுத்துவோம். சங்கீதம் 29:11 இல் இவ்வாறாக நாம் வாசிக்கிறோம். "கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார் கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார்." கர்த்தரை விசுவாசித்து அவரைப் பின்பற்றி அவரது கற்பனைகளுக்குக் கீழ்படிந்து வாழ்கின்றவர்கள் அவருடைய புத்திரர்களாக ஏற்றுக் கொள்ளப்படுவார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இவ்வாறாக யோவான் 1:12ல் கூறப்பட்டுள்ளவாறு கிறிஸ்துவை முழுமனதாக ஏற்றுக்கொண்டு நாம் வாழ்பவர்களானால், நமக்கு ஏற்படும் பெலவீனங்களிலும் கர்த்தர் நமக்கு சமாதானம் அருளுவார். பெலன் கொடுப்பார் – ஆசீர்வதிப்பார்.

பொதுவாக பெண்கள் பெலவீனமான பாண்டம் போன்றவர்கள் என்ற கருத்து நம்மிடையே நிலவினாலும் கர்த்தருக்குள் திட மனதுள்ளவர்களாய் விசுவாசித்து நடக்கும்போது நாமும் பெலனடைவோம். "தீமோத்தேயு 1:5 இல் வாசிக்கிற வண்ணம் முதிர்ந்த வயதில் விசுவாசம் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆபிரகாமின் துணையாகக் கொடுக்கப்பட்ட சாராள் என்ற பெண்ணிடம் காணப்பட்டதால் எபிரேயர் 11:11 இல் கூறப்பட்டுள்ளபடி பெலனடைந்து வயது சென்ற காலத்தில் பிள்ளை பெற்றாள். இறுதியில் ஈசாக்கு யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான். (எபி 11:20) நாம் கூட வேதத்தில் கூறப்பட்டுள்ள கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு வாழ்ந்தவர்களாகும் போது கர்த்தர் நமக்கும் பெலன் கொடுப்பார். ஆசீர்வதிப்பார்.

கர்த்தர் தாமே இந்த மாதம் முழுவதும் தம்முடைய வல்லமையால் நம்மை நிரப்பி ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு
தங்கள் உடன் ஊழியர்
**ஆயரம்மா.**



## WEDDING DAYS IN JUNE

| | |
|---|---|
| June 4 | Mr. John Joseph & Mrs. Divya rani |
| June 6 | Mr. A.Aron John Wesly and Mrs. J.Jessi |
| June 6 | Dr. R.Anish Daniel & Adv. Kamalini Anish |
| June 7 | Rev. K.Pichauimuthu & Mrs. G. Inbarani |
| June 7 | Mr. T.Wilson & Mrs. J.Baby Kamala |
| June 10 | Mr. M.Raju & Mrs.R.Epsipa |
| June 10 | Mr.Y.Israel & Mrs.Mary Kala |
| June 11 | Mr. M.Ponnappan & Mrs.N.Padma |
| June 11 | Mr. S,Gunasekaran &Mrs.Helen Prabha |
| June 12 | Mr. Vasudeva Rao & Mrs. Esthar Vanaja |
| June 16 | Mr.K.Emerson & Mrs.Angel Emerson |
| June 18 | Mr. P.Joseph Ramanathan & Mrs.J.Esther |
| June 27 | Mr. E.Jebakumar & Mrs. Sunitha Vayola |

**பிறந்த நாள் மற்றும் திருமண நாள்**
**கொண்டாடும் அனைவருக்கும் திருச்சபையின்**
**சார்பில் வாழ்த்துக்களை**
**தெரிவித்துக் கொள்கிறோம்!**

